*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **21 ஜனவரி 2026**

**<u>பத்திரிகை செய்தி</u>**

விக்ஸித் பாரத் ஜி ராம்ஜி 125 நாள் வேலை திட்டத்தின் கீழ் நெட்டப்பாக்கம் மற்றும் சோரியாங்குப்பத்தில் நடைபெற்று வரும் பணிகளை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று (21.01.2026) பார்வையிட்டார்.

நெட்டப்பாக்கம் கால்வாய் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, பணியில் ஈடுபட்டிருந்த பெண்களோடு கலந்துரையாடினார். அங்கு நடைபெற்று வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். மொத்த வேலை நாட்கள், அவர்களுக்கு கிடைக்க பெறும் ஊதியம், ஊதியம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் விவரம் அவர்களுக்கு இருக்கும் சிரமங்கள் ஆகியவை குறித்து கேட்டறிந்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த முதல் உதவி பெட்டகம் மற்றும் பதிவேடுகளைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து சோரியாங்குப்பத்தில் நடைபெற்று வரும் அறுவடைக் களம் மற்றும் நெல் சேமிப்பு கிடங்கு கட்டுமான பணிகளை பார்வையிட்டார். இங்கு பணியில் இருந்த தொழிலாளர்களிடம் கலந்துரையாடினார். அவர்கள் கொண்டு வந்திருந்த மதிய உணவை பார்வையிட்டு அதனை சுவைத்து உண்டு மகிழ்ந்தார்.